இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை
அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான இறுதி ஆய்வு

மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை

ஒக்டோபர் 2018



பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா,
கு. றொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்

centre for poverty analysis

# இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) ஆய்வின் கண்டறிவுகள்

# இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான இறுதி ஆய்வு

## மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை

ஒக்டோபர் 2018

பாசித் ஜனதீன், இசுரு தென்னகோன், மேகலா மகிழ்ராஜா,
கு.ரொமேஷன் மற்றும் ஹசந்தி தென்னகோன்

©வறுமை ஆராய்ச்சி நிலையம்

முதற்பதிப்பு – 2018

ISBN 978-955-3628-42-8

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை(eCRC) ஆய்வின் கண்டறிவுகள் : இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கல் தொடர்பான இறுதி ஆய்வு. மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான பணிமதிப்பீட்டு ஆய்வறிக்கை / பாசித் ஜனதீன் (et al.). - கொழும்பு : வறுமை ஆராய்ச்சி நிலையம் 2018, பக 45 செ.மி. 29

ISBN 978-955-3628-42-8

i. 373.07205493 டிடிசி23 ii. பாசித் ஜனதீன் (இணை ஆசிரியர்)

1. கல்வி இரண்டாம் நிலை - இலங்கை - ஆராய்ச்சி

இப்பதிப்பிற்கான முழு பதிப்புரிமையானது வறுமை ஆராய்ச்சி நிலையத்துக்கே உரிமையானதாகும். இந்நூலின் எந்தவொரு பகுதியும் நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியர்களின் ஒப்புதலுக்கேற்ப மீள பதிப்பு செய்யப்படலாம்.

ஆய்வுகள், திருத்தப்பட்ட தொகுதிகள், பணி அறிக்கைகள் (working paper), சுருக்கமான ஆவணங்கள் போன்றன தற்போது CEPA வெளியீடுகளில் உள்ளடக்கப்படுகின்றன. இந்த ஆய்வில் வெளியிடப்பட்ட கண்டறிவுகள் மற்றும் பரிந்துரைகள் போன்றன அந்தந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொதுச்சேவைப் வழங்குநர்கள் மற்றும் பொதுச்சேவை பெறுனர்களால் வழங்கப்பட்டவைகளாகும். CEPA அல்லது நன்கொடையாளர்களின் கருத்துகள் அல்லது கொள்கைகளை இந்த ஆய்வானது பிரதிபலிக்கவில்லை.

இந்த பதிப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்வதற்கு:

வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 ஆர். ஜீ. சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை
தொலைபேசி: +94(011) 2676955, 4690200
தொலைநகல்:+94(011) 2676959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

இந்த ஆவணம் ஐரேப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்கள் CEPA இன் முழுப் பொறுப்பாகும் என்பதோடு எந்தவொரு சூழ்நிலையிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டினை பிரதிபலிப்பதாக கருதமுடியாது.

# நூலாசிரியர்கள்

### பாசித் ஜனதீன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தர் ஆவார். இவர் கொழும்புப் பல்கலைகழகத்தில் சமூக விஞ்ஞானப் பிரிவில் தனது கலைமாணி பட்டத்தினைப் பெற்றார். பல்வேறு பங்குதாரர் செயன்முறை மற்றும் சமூகக் கற்கைகள் தொடர்பாக நெதர்லாந்து, வாஹனிங்ஹன்பல்கலைக்கழகத்திலிருந்தும்,சமூகப்பொறுப்புடைமைக் கருவிகள் குறிப்பாக, குடிமக்கள் அறிக்கை அட்டை முறைமை தொடர்பாக இந்தியாவில் பெங்களூரிலுள்ள பொதுவிவகாரங்கள் மையத்திடமிருந்தும் சர்வதேச உரிமங்களைப் பெற்றுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில்,திறனைக் கட்டியெழுப்புபவராகவும், வசதிப்படுத்துனராகவும் (Facilitator) பயிற்சியாளராகவும் செயற்படுகின்றார் அதேபோல ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபடுவதோடு ஆய்வு நடவடிக்கை மற்றும் செயன்முறையில் தனது நிபுணத்துவத்தினை கையாளுகின்றார். சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணிபுரிவதில் முக்கியபங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்புக்கூறும் பொறி முறைகள் தொடர்பான திறனைக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டல்களை வழங்குவதோடு வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும் பணியாற்றி வருகின்றார். வவுனியா மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுச் செயன்முறைக்கும்,வெளியீட்டிற்கும் வழிவகுத்தார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்தில் சிறந்த நல்லாட்சி மற்றும் சமூகப் பொறுப்புக்கூறும்கருவியாகிய குடிமக்கள் அறிக்கை அட்டையினை வழிநடாத்தி வருகின்றார்.

### இசுரு தென்னகோன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். இவர் தற்போது கொழும்பு பல்கலைகழகத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா கற்கைநெறி ஒன்றினை பயின்று வருவதோடு பொருளாதாரத்தில் குறிப்பாக பொருளாதாரக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் இளமானி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைகழகத்தில் இருந்து பெற்றுள்ளார். ஆலோசனை உளவியல் தொடர்பில் டிப்ளோமாவை பெற்றுள்ளதோடு ஒரு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். இசுரு ஒரு கவிஞர் என்பதோடு அவர் இதுவரை மூன்று கவிதை புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவர் முன்பு இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், ஆய்வு உதவியாளராகவும் பணியாற்றியுள்ளார். வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், இவர் வறுமையின் முகங்கள் எனும் கருப்பொருளினை ஆய்வு செய்கின்ற குழுவிலும், தகவல் தொடர்பாடல் குழுவிலும் பணியாற்றி வருகின்றார். இவர் தற்போது குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பில் கவனம் செலுத்துகின்ற ஒரு ஆய்வில் ஈடுபட்டுள்ளதோடு மொனராகலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்விற்கு இவரே கள ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

### மேகலா மகிழ்ராஜா

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு உத்தியோகத்தராவார். இவர் பேராதனை பல்கலைகழகத்தில் அபிவிருத்தி நடைமுறைகள் தொடர்பாக முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். அத்தோடு இலங்கை மதிப்பீட்டு (Sri Lanka Evaluation Association -SLEvA)சங்கத்துடன்இணைந்த தேசிய தொழில்துறை நிறுவனத்தில் (National Institute of Labour Studies -NILS)கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் டிப்ளோமா பாடநெறியையும் நிறைவு செய்துள்ளார். இவர், வறுமை ஆராய்ச்சி நிலையத்தில், திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல் அதேபோல ஆராய்ச்சி போன்ற விடயங்களில் ஈடுபட்டுள்ளதோடு ஆய்வு நடவடிக்கைகளில் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது இவர் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து பணி புரிவதில் முக்கிய பங்கு வகிக்கின்றார் அத்தோடு சமூகப் பொறுப்பு பொறிமுறைகள் குறிப்பாக "குடிமக்கள் அறிக்கை அட்டை" எனும் கருவி தொடர்பான திறனை கட்டியெழுப்புவதற்கான ஆதரவினை வழங்குகின்றார். இவர் குடிமக்கள் அறிக்கை அட்டை தொடர்பான ஆய்வில் தனது பங்களிப்பினை வழங்கியதோடு 2014 இல் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பான வெளியீட்டிலும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்.

### குலசபாநாதன் ரொமேஷன்

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தராகவும் முகாமைத்துவ குழுவின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் அபிவிருத்தி துறையில் அரசு மற்றும் நிதி நிறுவனங்களுடன் கடந்த 20 வருடங்களாக பணியாற்றியுள்ளார். இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் நிதியியல் பொருளாதாரத்தில் தனது முதுகலைமாணி பட்டத்தினைப் பெற்றுள்ளார். வறுமையின் முகங்கள் தொடர்பாக ஆய்வு செய்கின்ற அணியின் தலைவர் என்ற வகையில்,இவரும் அவரது அணியும்வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளில் பெறப்படுகின்ற வறுமை, சமத்துவமின்மை மற்றும் சுபீட்சம் தொடர்பான விடயங்களை சேகரிப்பதற்கு பொறுப்பானவர்களாவர். மேலும்,வறுமையின் முகங்கள் தொடர்பான குழுவானது வறுமை அளவீடு குறித்து பணியாற்றுவதோடு வறுமை மீது தாக்கம் செலுத்துகின்ற பேரினக் காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்த முன்வந்துள்ளது.

### ஹசந்தி தென்னகோன்

தஸ்மானியா பல்கலைகழகத்தில் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் எனும் பாடநெறியில் முதுமாணி பட்டத்தினை பெற்றுள்ளதோடு, பெருநிறுவனங்களின் பேண்தகைமை தொடர்பாக விரிவான அனுபவத்தினை கொண்டுள்ளார். சுற்றுச்சூழல் மற்றும் சமூக பேண்தகைமை தொடர்பான விடயங்களில் இவர் கவனம் செலுத்துகின்றார். இவர் தற்போது வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கான ஆய்வு ஆலோசகராக கடமையாற்றுவதோடு உலக வங்கியில் சமூக பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்.

## வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) பற்றி

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Center for Poverty Analysis-CEPA),வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை வழங்குகின்ற இலங்கையின் சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். "வறுமை என்பதொரு அநீதியாகும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டியதே" என வறுமை ஆராய்ச்சி நிலையம் நம்புவதோடு அதனை மையப்படுத்தி தனது ஆய்வுகளை முற்படுத்தி வலியுறுத்துகின்றது. அத்தோடு வறுமையை வெற்றிகொள்வதென்பது தேசிய மற்றும் சர்வதேச ரீதியான கொள்கைகள், நடைமுறைகள் போன்றவற்றில் மாற்றங்களை/ சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதையும் அதேபோல வறுமையிலுள்ள மக்களுடன் இணைந்து செயற்படுவதையும் உள்ளடக்குகிறது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது சுயாதீனமான பகுப்பாய்வு, அபிவிருத்தி வகிபங்காளர்களின் திறனைக் கட்டியெழுப்புதல், மற்றும் கொள்கை அழுத்தங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டறிதல் தொடர்பான அம்சங்களை முக்கியத்துவப்படுத்தி வலியுறுத்துகின்றது. சந்தையின் தேவைகளுக்கேற்ப பிரதிபலிக்கின்ற அதேவேளை, பலமான அனுபவரீதியான ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்ட சேவை வழங்குதல் தொடர்பான எமது வலுவான நோக்குநிலையானது எம்மீது செல்வாக்கு செலுத்துகின்றது. வாடிக்கையாளர் கோரிக்கைகளின் மூலம் இந்தசந்தை நோக்குநிலையை வறுமை ஆராய்ச்சி நிலையம் பராமரிக்கின்றது. இறுதியாக தேசியரீதியாக, பிராந்தியரீதியாக, துறைரீதியாக, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் திட்டஅளவில் வறுமையோடு தொடர்புடைய அபிவிருத்திக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்புச் செய்வதற்கு வறுமை ஆராய்ச்சிநிலையம் முயற்சிக்கின்றது. மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையமானது உட்கட்டமைப்பு, குடிப்பெயர்வு, சுற்றுச்சூழல், முரண்பாடு மற்றும் நலினத்துவம் போன்ற ஐந்து பரந்த கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு இணையான சுயாதீன ஆராய்ச்சியினையும் தொடர்கின்றது.

# நன்றியுரை

இந்த ஆய்விற்கு ஆதரவளித்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Centre for Poverty Analysis-CEPA) நன்றி தெரிவிக்க விரும்புகின்றது. வறுமை ஆராய்ச்சி நிலையமானது ACTED உடன் இணைந்து மேற்கொண்ட "சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி கூட்டுறவினை உருவாக்குதல்: சிறந்த சமூக நல சேவைகளுக்காக சிவில் சமூக அமைப்புகள் (Civil Society Organizations–CSOs)மற்றும் அரச அதிகாரிகளுக்கிடையிலான ஒத்துழைப்பினை வளர்த்தல்" எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வினை (Citizen Report Card-CRC) வடிவமைப்பதிலும், முன்னெடுப்பதிலும் CEPA முன்னணி வகித்தது.

மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள்,ACLGs, பிரதேச சபைகளின் செயலாளர்கள் (Secretaries of Pradheshiya Sabhas-PSs)மற்றும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களின் வலையக் கல்விப் பணிப்பாளர்கள், துணைக் கல்வி பணிப்பாளர்கள் (Deputy Directors of Education –DDEs),உத்தியோகத்தர்கள் போன்றோரால் எமக்கு வழங்கப்பட்ட ஆதரவின் மூலம் மற்றும் தரவு சேகரிப்பாளர்களுடன் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் கனிஷ்ட ஆய்வு உத்தியோகத்தர்சிவலிங்கம் அனுஷா மற்றும் ஷெஹானா மிர்சா ஆகியோர் வழங்கிய பங்களிப்பினால்இந்த ஆய்வு சாத்தியமானது. இந்த ஆய்விற்கு தேவையான தகவல்களை வழங்கிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் மதிப்புமிக்க பங்களிப்பிற்கு CEPA நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

மொனராகலை மாவட்டத்திலுள்ள பின்வரும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் CEPA நன்றி தெரிவிக்க விரும்புகின்றது.

| தொ.இல | DS பிரிவு | GN பிரிவு | சிவில் சமூக அமைப்புகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | படல்கும்புர | தேவதுர | எகமுது விவசாய அமைப்பு |
| 2 | படல்கும்புர | எல்ல | சரண சுபசாதக சங்கமய |
| 3 | படல்கும்புர | மாலிகாதன்ன | திலெனதரு பெண்கள் அமைப்பு |
| 4 | படல்கும்புர | லுனுகல கோலனி | அருண கிராம அபிவிருத்தி சங்கம் |
| 5 | மடுல்ல | பங்குர | ஸ்ரீ பங்கசேகர சமகி சுபசாதன சமித்திய |
| 6 | மடுல்ல | நாமலோயா கோலனி | நாமலோய ஜனபதய கிராமிய சங்கம் |
| 7 | மடுல்ல | பங்குவ | லஹிரு விவசாய அமைப்பு |
| 8 | மடுல்ல | தல்கொடயாய | சமூர்த்தி கிராமிய சமூகம் |
| 9 | மடுல்ல | மாகந்தா ஓயா கோலனி | பிரகதிவிவசாய அமைப்பு |

| | | | |
|---|---|---|---|
| 10 | மடுல்ல | கொல்லதெனிய | தினிதுவிவசாய அமைப்பு |
| 11 | மடுல்ல | ரிதிகாவத்தை | அசரனசரன இறப்பு நன்கொடை |
| 12 | மெதகம | பிபிலமுல்ல | தீப்தி கந்த சன்விதானய |
| 13 | மெதகம | எல்ஹெனை | நவஹிரு லமா சமாஜய |
| 14 | மெதகம | கொடபூவ | “அலுத்வெல எகமுது பரிசர சமாஜிகயங்கே சமாஜ சுபசாதன சமித்திய” |
| 15 | மெதகம | பாண்டியாவ | “பதியவ திரசரசரசஹ யோகிதபதனம” |
| 16 | மெதகம | பிட்டதெனிய | சமூர்த்தி கிராமிய சமூகம் |
| 17 | மெதகம | மேல்லகம | மேல்லகம கிராமிய அபிவிருத்தி சங்கம் |
| 18 | மெதகம | ரத்தனாதெனிய | வேவ்மட எகமுது சுபசாதன மரணாதார சமித்திய |

# சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| ACLG | Assistant Commissioner of Local Government- உள்ளூராட்சி உதவி ஆணையாளர் |
| EU | European Union - ஐரோப்பிய ஒன்றியம் |
| CEPA | Centre for Poverty Analysis- வறுமை ஆராய்ச்சி நிலையம் |
| CSO | Civil Society Organisation – சிவில் சமூக அமைப்பு |
| CRC | Citizen Report Card – குடிமக்கள் அறிக்கை அட்டை |
| eCRC | Electronic Citizen Report Card - இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை |
| DS | Divisional Secretary – பிரதேச செயலகம் |
| DDE | Deputy Director of Education – பிரதி கல்விப் பணிப்பாளர் |
| GNDs | GramaNiladhari Divisions – கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் |
| PS | Pradeshiya Sabha– பிரதேச சபை |
| WRDS | Women’s Rural Development Society– மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் |
| RDS | Rural Development Society – கிராம அபிவிருத்தி சங்கம் |
| ZED | Zonal Director of Education – வலயக் கல்விப் பணிப்பாளர் |

# விளக்கப்படங்களின் பட்டியல்

விளக்கப்படம் 1: கிராம சேவகர் பிரிவுக்குள்ளே அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்லல் ...................... 9
விளக்கப்படம் 2: ஒரு கிராமசேவகர் பிரிவுக்கு வெளியிலுள்ள பாடசாலைக்கு வருகை தருவதற்கான காரணங்கள் ........................................................................................................................ 10
விளக்கப்படம் 3: கல்வி தரம் குறித்த ஒட்டுமொத்த திருப்தி ................................................................ 11
விளக்கப்படம் 4: தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள் ............................................ 12
விளக்கப்படம் 5: படல்கும்புர DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு............... 12
விளக்கப்படம் 6: மெதகம DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு ................. 13
விளக்கப்படம் 7: மடுல்ல DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு ................... 13
விளக்கப்படம் 8: பாடசாலைகளால் கோரப்பட்ட மேலதிக கட்டணங்கள் ................................................ 14
விளக்கப்படம் 9: பாடசாலைக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ........................................................................................................................ 15
விளக்கப்படம் 10: பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்கள் ............................................ 15
விளக்கப்படம் 11: மாணவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளின் வகைகள் .................................. 16
விளக்கப்படம் 12: பாடசாலைகளில் இடம்பெறும் பாகுபாடுகள்............................................................. 16
விளக்கப்படம் 13: பாடசாலைகளில் நிகழும் துஷ்பிரயோகங்கள் .......................................................... 17
விளக்கப்படம் 14: ஆசிரியர்கள் தொடர்பான சிக்கல்கள் ........................................................................ 17
விளக்கப்படம் 15: இரண்டாம் நிலை கல்விச்சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு ........................ 19
விளக்கப்படம் 16: படல்கும்புரபிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள் .......... 20
விளக்கப்படம் 17: மெதகம பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள் ............ 21
விளக்கப்படம் 18: மடுல்லபிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள் ................ 21

# உள்ளடக்கம்


1. அறிமுகம்........................................................................................................1

1.1. திட்டம்........................................................................................................1

1.2. அறிக்கையின் செயற்பரப்பெல்லை ......................................................................2

1.3. ஆய்வின் நோக்கங்கள் ....................................................................................2

1.4. மாதிரி வடிவமைப்பு........................................................................................2

1.5. ஆய்வு முறைமை...........................................................................................4

1.5.1 குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன? ................................................ 4

1.5.2 இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) என்றால் என்ன?.............................. 5

1.5.3 குடிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு ................................................ 6

1.5.4 இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல் ............................................................ 7

1.5.5 செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம் .................................................. 7

1.6. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசம்.....................................................................8

2. முக்கிய கண்டறிவுகள் ......................................................................................9

2.1 இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல்...........................................................9

2.2 இரண்டாம் நிலை கல்வி சேவைகளுடனான தரம் மற்றும் திருப்தி ..............................10

2.3 வசதிகள்.......................................................................................................12

2.4 மேலதிக கட்டணங்கள்.....................................................................................14

2.5 ஏனைய அசௌகரியங்கள் ..................................................................................15

3. இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள் .............................18

4. பரிந்துரைகள் ...................................................................................................20

4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் .........................20

4.1.1 உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள் .................................. 20

4.1.2. முன்னேற்றங்களுக்கான பரிந்துரைகள்............................................................. 22

4.1.3. ஏனைய பரிசீலனைகள் .................................................................................. 22

4.2. முன்னோக்கிய நகர்வு........................................................................................22

# 1. அறிமுகம்

## 1.1. திட்டம்

சேவை வழங்குனர்களின் பொறுப்புணர்வினை உறுதிசெய்கின்ற அதேவேளை ிறந்த அணுகல் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குநர்களுடன்) ஒத்துழைக்க சிவில் சமூக அமைப்புகளை பலப்படுத்த வேண்டும் என்பதே *"சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக நல சேவைகளுக்காக சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிளுக்கிடையில் உள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்"* எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் நோக்கமாகும். பின்வரும் திட்ட முடிவுகளை அடைவதற்கு ACTED மற்றும் வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) ஒத்துழைப்பு வழங்குகின்றன. 2018 ஆம் ஆண்டு ஜனவரி – பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலாம் கட்ட ஆய்வானது, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள இரண்டாம் நிலைக் கல்விச் சேவை வழங்கல் தொடர்பான அடிப்படை தரவுகளை வழங்கியபோதிலும், இத்தரநிலை மதிப்பீட்டு ஆய்வானது (இரண்டாம் கட்ட ஆய்வு) முதலாம் கட்ட ஆய்வில் ஆராயப்பட்ட கல்விச்சேவை வழங்கலின் முன்னேற்றத்தை மேற்பார்வையிட 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

ACTED பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது (RI & R2):

- R1 – தமது பணிப்பாணைகள் மற்றும் உள்ளூர்சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான திறன் போன்றவற்றினை செயற்படுத்துவதற்கான சிவில் சமூக அமைப்புகளின் ஆற்றலை மேம்படுத்துதல்.

- R2 –சமூக சேவைகள் என்ற அடிப்படையில் உள்ளூர் தேவைகள் மற்றும் இடைவெளிகள் போன்றன பல "பங்குதாரர்கள் பங்களிப்பு அணுகுமுறை" மூலமாகவும்,சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகள் மூலமாகவும் அடையாளம் காணுதல்.

CEPA பின்வரும் முடிவுகளை வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது(R3):

- R3 – சேவை வழங்குநரின் சிறந்த பொறுப்புடைமையினை மேம்படுத்துவதற்காக சமூக சேவை வழங்கல்/தரம் குறித்த மேம்பட்ட கண்காணித்தல் மற்றும் பிரதானமாக சிறந்த நடைமுறைகளை பரவலாக்குதல்.

இதில் CEPA ஆல்ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டன அவையாவன:

- பல்வேறு மட்டங்களில் பொதுச்சேவை வஙழ்குநர்களை அடையாளப்படுத்தல்
- இலக்கிடப்பட்ட சிவில் சமூக அமைப்புகளிலிருந்து தரவு சேகரிப்பவர்களை தேர்தெடுத்தல்,
- குடிமக்கள் அறிக்கை அட்டை செயன்முறை தொடர்பாக கணக்கெடுப்பாளர்களை பயிற்றுவித்தல்,
- வினாகொத்தினை வடிவமைத்தல் மற்றும் தரவு சேகரித்தல் போன்றவற்றை வசதிப்படுத்தல்,
- அரசாங்க அதிகாரிகளுடன் (சேவை வழங்குநர்களுடன்) கண்டறிவுகளை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இடைவெளிகளை நிரப்புவதற்கான செயற்பாடுகளை விருத்தி செய்வதில் அவர்களுக்கு ஆதரவளித்தல்.

## 1.2. அறிக்கையின் செயற்பரப்பெல்லை

மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலுக்கான eCRCஇன் இரண்டாம் கட்ட ஆய்வுக் கண்டறிவுகளை(தரநிலை மதிப்பீட்டு ஆய்வு) இவ்வறிக்கையானது உள்ளடக்குகின்றது.படல்கும்புர, மெதகம மற்றும் மடுல்லஆகிய பிரதேச செயலகம் (DS) பிரிவுகளில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி-பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்ட 1 ஆம் கட்ட ஆய்வினைத் தொடர்ந்து2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் கண்டறிவுகளை இது உள்ளடக்குகின்றது.

## 1.3. ஆய்வின் நோக்கங்கள்

ஆய்வின் குறிப்பிட்ட நோக்கங்களாவன:

(i) பொதுச் சேவைகளின் உண்மையான பயனர்களின் அணுகல், மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுகின்ற கருவியாகவும் அதேபோல அரசாங்க அதிகாரிகளின் (சேவை வழங்குநர்களின்) சமூக பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் குடிமக்கள் அறிக்கை அட்டையைப் பயன்படுத்துதல்

(ii) இந்த ஆய்வின் கண்டறிவுகளை செயற்பாடுகளுக்கு சார்பாக பரப்புவதோடு அம்முடிவுகளை செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறை சீர்த்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்துதல்.

(iii) ஏனைய மாவட்டங்களிலுள்ள ஏனைய பொது நிறுவனங்கள் மேற்கொள்ளும் இதுபோன்ற முயற்சிகளுக்காக, தற்போது சேவைகளை பெறும் பயனர்களிடமிருந்து பெறப்பட்ட இவ்வனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

## 1.4. மாதிரி வடிவமைப்பு

ஒரு சேவையைப் பயன்படுத்துகின்ற மக்களின் வீதம், ஒரு சேவையுடன் மக்கள் கொண்ட திருப்தியின் வீதம் போன்ற தகவல்களைப் பிரித்தெடுப்பதினூடாக தரப்பட்ட ஆய்வுப் பிரதேசம் ஒன்றில் சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு இரண்டு அணுகுமுறைகள் பயன்படுகின்றன. குழுவிலுள்ள ஒவ்வொரு தனிநபரையும் பரீட்சித்து பார்த்தல் மற்றும் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கண்டறிவுகளை ஒருங்கிணைத்தல் போன்றன ஒரு முறையாகும். இம்முறையானது, முழுமையான கணக்கெடுப்பு அல்லது குடித்தொகை கணக்கெடுப்பு என்றழைக்கப்படுகின்றது. பாரியளவான சனத்தொகையிலிருந்து ஒரு உபதொகுதியினை தெரிவு செய்து அந்த உபதொகுதியிலிருந்து பொருத்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கான மற்றொரு வழிமுறையாகும். இம்முறையானது "மாதிரி வடிவமைப்பு" எனவும் தெரிவுசெய்யப்பட்ட உபதொகுதி "மாதிரி" எனவும் அழைக்கப்படுகின்றது. மிகவும் செலவு குறைந்ததாக மற்றும் குறைந்த ஊழிய செறிவினைக் கொண்டிருப்பதால் இவ்வாய்வில் "மாதிரி வடிவமைப்பு ஆய்வு" முறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

நம்பகமான மற்றும் துல்லியமான தரவானது, மாதிரி தேர்ந்தெடுக்கப்படும் முறையிலேயே தங்கியுள்ளது. ஆய்வுப் பகுதியில் காணப்படுகின்ற மொத்த சனத்தொகையின் வேறுபாடுகள் மற்றும் பண்புகள் அனைத்தையும் பிரதிபலிக்கின்ற போது ஒரு மாதிரியானது சிறந்ததாக அமைகின்றது.

இரண்டு வகையான சேவைகளுக்காக இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை முன்னெடுக்கப்பட்டது. ஒன்று இரண்டாம் நிலை இலவசக்கல்வி மற்றொன்று பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள். முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ACTED மூலம் தெரிவுசெய்யப்பட்ட

60 கிராமசேவகர் பிரிவுகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டைஉள்ளடக்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 60 கிராமசேவகர் பிரிவுகளில் 1200 குடும்பங்கள் அல்லது ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள 20 கிராமசேவகர் பிரிவுகளில் 400 குடும்பங்களாக ஆய்விற்கான மாதிரியளவு தீர்மானிக்கப்பட்டது. 20 கிராமசேவகர் பிரிவுக்கும் 400 குடும்பங்கள் எனும் மாதிரியளவானது பின்னர் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தன.


மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை போன்ற மூன்று மாவட்டங்களிலும் மாதிரி வடிவமைப்பு செயன்முறையானது பல கட்டங்களில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில்,கிராமசேவகர் பிரிவுக்குள் காணப்படுகின்ற குடும்பங்களின் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு,சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் மூலம், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் பாடசாலைக்கு செல்லும் (தரம் 5 – தரம் 13 வரை) வயதுடைய பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, பட்டியலிடப்பட்டன. இவற்றுள், ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளுக்காக கணக்கிடப்பட்ட மாதிரியளவினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்விற்கான குடும்பங்களைப் பிரிதிநிதித்துவப்படுத்தும்மாதிரியானது எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டது. அதேவேளை பிரதேச சபை சேவைகள் தொடர்பான ஆய்விற்கென, மாதிரியானது ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்களால் அடையாளம் காணப்பட்ட பாடசாலைக்கு செல்லும் மாணவர்களை உள்ளடக்கிய குடும்பங்களில் இருந்து பெறப்பட்டதோடு பிரதேச சபையினால் வழங்கப்படும் குறைந்தது ஒரு சேவையையாவது கடந்த ஒருவருட காலத்தில் பயன்படுத்திய அல்லது பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற குடும்பங்களாக இருக்க வேண்டும் என்ற அளவுகோலின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டன. கிராமசேவகர் பிரிவிலுள்ள அனைத்து கிராமங்களையும் பிதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் பரந்தளவிலான பகுதிகளை உள்ளடக்கி இன ரீதியிலான விகிதாரம் எனும் கண்ணோட்டத்தினை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிகளில் இருந்தும் மாதிரி வடிவமைப்பானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அனைத்து தரப்பரிசோதனைகளையும் தொடர்ந்து மூன்று மாவட்டங்களிலுள்ள 60 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 1200 குடும்பங்கள் மாத்திரமே (மட்டக்களப்பு மாவட்டத்தில் 400, மொனராகலை மாவட்டத்தில் 400 மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 400) பகுப்பாய்விற்கென தீர்மானிக்கப்பட்ட மாதிரிகளாகும்.

இரண்டாம் கட்ட ஆய்வின் போது, முடியுமானவரை முதலாம் கட்டத்தில் ஆய்வுசெய்யப்பட்ட அதே குடும்பங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டன. இருப்பினும், அதே குடும்பங்களை ஆய்விற்குட்படுத்த வேண்டுமென்ற தேவை இருக்கவில்லை அல்லது தரவு சேகரிப்பாளர்கள் அதே குடும்பங்களுக்குச் செல்ல வேண்டுமென முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. முதலாம் கட்ட ஆய்வில் பங்கேற்ற குடும்பங்கள் இக்குறிப்பிட்ட ஆய்வின்போது பங்கேற்றனரா இல்லையா என்பது கருத்தில்கொள்ளாமல், ஆய்வுப்பகுதியிலுள்ள அனைத்து குடும்பங்களில் இருந்தும் பெறப்பட்ட கருத்துக்களானவை, முழு சமூகத்தையும் உள்ளடக்கிய வகையில் வழங்கப்படுகின்ற சேவைகளின், முன்னேற்றம் தொடர்பான முடிவுகளை வரையறுப்பதற்கு போதுமானதாக இருக்கின்றன.

பின்வரும் மாதிரி வடிவமைப்புக் கூறினை (sampling matrix) அடிப்படையாகக் கொண்டு மாதிரியாக்கம் முன்னெடுக்கப்பட்டது:

| சனத்தொகை (குடும்பங்கள்) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (95 % நம்பிக்கையாயிடை) | குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரியளவு (90 % நம்பிக்கையாயிடை) |
|---|---|---|
| 100 | 80 | 66 |
| 500 | 217 | 141 |
| 1000 | 278 | 164 |
| 5,000 | 357 | 189 |
| 10,000 | 370 | 192 |
| 30,000 | 379 | 195 |
| 50,000 | 381 | 195 |
| 100,000 | 383 | 196 |
| 200,000 | 383 | 196 |

கீழே தரப்பட்ட செயற்கைகோள் படமானது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளின் பரவலாக்கத்தினை காட்டி நிற்கின்றது.




# 1.5. ஆய்வு முறைமை

## 1.5.1 குடிமக்கள் அறிக்கை அட்டை என்றால் என்ன?

குடிமக்கள் அறிக்கை அட்டையானது (Citizen Report Card-CRC), இலவசமாக வழங்கப்படுகின்ற பொது சேவைகளின் செயற்திறன் குறித்து அச்சேவையினை பெறுபவர்களிடமிருந்து முறையான மற்றும் அனுபவங்கள் தொடர்பான கருத்துக்களை பெறக்கூடிய ஒரு எளிமையான, சக்திவாய்ந்ததொரு கருவியாகும். இவ்வாய்வு முறையானது குறித்த சேவையைப் பெற்றுக்கொள்பவர்களிடம் இருந்து அச்சேவைகளின் தரம், அதனைப் பெற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் அச்சேவை போதியளவு வழங்கப்படுகின்றதா? மற்றும் அச்சேவை பற்றிய திருப்தி நிலை தொடர்பான கருத்துக்களை சேகரிக்கின்ற ஒரு பங்கேற்பு ஆய்வாகும். சேவை வழங்குநர்களுடன் ஒரு உரையாடலில் ஈடுபடுவதற்கு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக சேவை வழங்குநர்களை பொறுப்புணர்வுடன் இருக்கச்செய்வதற்கு சமூகங்கள்,சிவில் சமூக அமைப்புக்கள் அல்லது உள்ளூராட்சி சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு பலமான மற்றும் செயற்திறன் வாய்ந்த ஒரு அணுகுமுறையினை குடிமக்கள் அறிக்கை அட்டை வழங்குகின்றது. ஆரம்பத்தில் குடிமக்கள் அறிக்கை அட்டைநகர்ப்புற சூழ்நிலைகளில் நடத்தப்பட்டிருந்தாலும், இப்போது பரந்தளவிலான புவியியல் மற்றும் துறைசார்ந்த சூழ்நிலைகளில் பொது சேவை வழங்கலின் நிலையைப் புரிந்துகொள்ள இது உதவுகின்றது.

குடிமக்கள் அறிக்கை அட்டை பல நன்மைகளை வழங்குகின்றது. சேவை வழங்குநர்கள் தாங்கள் வழங்குகின்ற பொதுச் சேவைகளானது பொதுமக்களை குறிப்பாக, போதிய வசதிகளற்ற உறுப்பினர்களை சென்றடைவதற்கான குறைந்த செலவுடைய வழிமுறையை கண்டறிய உதவுகின்றது. இதனையொட்டி, பொது சேவைப் பெறுநர்கள் தாங்கள் பெற்றுக்கொள்கின்ற சேவைகளின் தரம், செயல்திறன், மற்றும் போதியத்தன்மை குறித்தும் அதேபோல சேவை வழங்குநர்களுடன் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் தமது கருத்துக்களை உள்ளூர் அரசாங்கத்திற்கு மற்றும் அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் வாய்ப்பினை வழங்குகின்றது. பல்வேறு சேவை வழங்குநர்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், பல்வேறுபட்ட சேவைகளுக்கிடையில் தமது மதிப்பீடுகளை ஒப்பிடுவது சாத்தியமாகின்றது. இதன் விளைவாக மதிப்பீடானது (சேவைப்பெறுநரின் திருப்தியினை அடிப்படையாகக் கொண்டது), குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றிற்கான பொது சேவை வழங்கலின் செயற்திறன் தொடர்பான 'அறிக்கை அட்டையாக'மாற்றப்படுகிறது. பொது சேவைப் பெறுநர்களின் அனுபவங்களை குடிமக்கள் அறிக்கை அட்டை பிரதிபலிக்கும் வகையில், மேற்கொள்ளப்படும் சேவை வழங்கல் தொடர்பான ஒரு கருத்துக்கணிப்புடன் குடிமக்கள் அறிக்கை அட்டையை ஒப்பிட்டு பார்க்க முடியாது. உதாரணமாக,குடிமக்கள் அறிக்கை அட்டைகளை உருவாக்கும் ஆய்வுகளானது, குறிப்பிட்ட சேவைகளைப் பயன்படுத்துகின்ற தனிநபர்களை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கும்.

உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் என ஆரம்பித்து 20 இற்கும் மேற்பட்ட நாடுகளிலுள்ள அபிவிருத்தி பங்காளர்கள் வரையான பல்வேறு நிறுவனங்களில் குடிமக்கள் ஈடுபாடு, பங்கேற்பு மற்றும் சேவை மேம்பாடுகளுக்கான ஒரு கருவியாக குடிமக்கள் அறிக்கை அட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கருவி பொதுவாக, குடிமக்கள் மற்றும் அரசாங்கத்துகிடையிலான ஈடுபாட்டின் அடிப்படையில் தரவினை உருவாக்குவதோடு செல்வாக்கு செலுத்தும் பல பகுதிகளில் இதனுடைய பயன்களை விரிவுபடுத்திக்கொள்ள முடியும். உதாரணமாக, பொதுக் கொள்கைகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் அறிவிப்பதற்கான, அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவை வழங்கல் பொறிமுறைகளை மறுசீரமைப்பதற்கான, மற்றும் அரசாங்க மற்றும் சமூக நிறுவனங்களை மீள்கட்டமைப்பதற்கான அடிப்படையாக இது மாற முடியும்.

மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மிகவும் பின்தங்கிய மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்களில் கவனம் செலுத்திய இக்குறிப்பிட்ட ஆய்வில் ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு குரல் கொடுப்பதற்கான ஆற்றல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. தமது சொந்த விருப்பங்களை மேற்கொள்ள, அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மற்றும் நம்பகமானதும் நிலையானதுமான வாழ்க்கைக்கு வழிவகுப்பதற்கு சமூகங்களுக்கு அதிகாரமளித்தலே நோக்கமாக இருந்தது. இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, சமூக அடிப்படையிலான ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை வாய்ந்த சேவைகளை மதிப்பிடுதல் தொடர்பாக வறுமை ஆராய்ச்சி நிலையம் கவனம் செலுத்தியது. வறியோர் சார்பு மற்றும் உரிமைகள் அடிப்படையிலான கண்ணோட்டத்திலிருந்து ஏற்கனவே உள்ள நடைமுறைகள் அதேபோல கொள்கைகளில் அழுத்தங்களை ஏற்படுத்துவதே நோக்கமாக இருந்தது.

சமூக உள்ளீடுகளுக்கு மேலதிகமாக சேவைபெறுநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடையே ஒரு பயனுள்ள உரையாடலை மேம்படுத்துவதற்காக சேவை வழங்குநர்களிடமிருந்து முகாமைத்துவ ரீதியான பிரதிபலிப்பையும் ஆய்வானது பெற்றுக்கொண்டது. இந்த ஆய்வினை மீள மீள முன்னெடுப்பதன் மூலம் ஆய்வின் நன்மை மேம்படுத்தப்படுவதோடு, முகாமைத்துவ ரீதியான பிரதிபலிப்பில் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் (அல்லது பிற தலையீடுகள்) சேவை பெறுநர்களுக்கான சேவைகளை மேம்படுத்தியதா என்பதை தீர்மானிக்கவும் வழிவகுக்கும்.

## 1.5.2 இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை (eCRC) என்றால் என்ன?

தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி, வசதி மற்றும் அதன் சக்திகள் போன்றவற்றினை கையாளக்கூடிய குடிமக்கள் அறிக்கை அட்டைகளை முன்னெடுப்பதற்கான ஒருபுரட்சிகரமான அணுகுமுறையே இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை அல்லது eCRC எனப்படுகிறது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையானது "ஆண்ராய்ட்" அடிப்படையிலான கையடக்கத் தொலைபேசி (Android –based mobile)பயன்பாடுகளினூடக குடிமக்கள் கருத்துக்களின் நம்பகமான சேகரிப்பினை உறுதிப்படுத்துவதோடு சரியான மற்றும் உரிய நேரத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்து அறிக்கையிட

முடிகின்றது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை செயன்முறையில் பல கூறுகள் காணப்படுகின்றன:

#### (a) ஆய்வினை மேற்கொள்ளுதல்

பொதுமக்களின் கருத்து மற்றும் அனுபவங்கள் பற்றிய ஒரு அறிவியல் சார் மாதிரி ஆய்வானது, கைப்பேசியொன்றின் பயன்பாட்டினைப் பயன்படுத்தி ஒரு டெப்லெட் (tablet) மூலமாக நடாத்தப்படுகின்றது. தொலைபேசிகள்/டெப்லெட்களில் உள்ள பூகோள நிலைப்படுத்தல் அமைப்பு முறை (GPS) எனும் கண்காணிப்பு முறை மூலம் தரவு சேகரிப்பின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு, உறுதிப்படுத்தப்படுகின்றது.

#### (b) தரக்கட்டுப்பாட்டிற்கான தொலைதூரக் கண்காணிப்பு

உண்மை நேர அடிப்படையில் ஆய்வின் முன்னேற்றத்தை கண்காணிக்க,ஆய்வு முகாமையாளர்களுக்கு வலைதளத்தை மையப்படுத்திய ஆய்வு முகாமைத்துவ தொகுதி ஒன்று உதவுகின்றது. இத்தொகுதியானது, தொலைதூரக் கண்காணிப்பு, ஆய்வு நடவடிக்கைகளின் முகாமைத்துவம் போன்றவற்றினை செயற்படுத்துவதால், மிகச்சிறப்பான தரக் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றது.

#### (c) தரவுப் பகுப்பாய்வு

இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட ஆன்லைன் டாஷ் போர்ட் (online dash board) மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற கருவிகளானது, பல்வேறுபட்ட பங்குதாரர் (உதாரணமாக, கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள், அரசியல் பிரதிநிதிகள், மற்றும் குடிமக்கள் போன்றோர்) குழுக்களின் தகவல் தேவைகளை அடையாளப்படுத்துகின்றது. விளக்கப்படங்கள் அட்டவணைகள், வரைபடங்கள் ஆகியவற்றின் மூலமாக இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் ஆய்வின் முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன. செயற்திறன் மட்டங்கள் தொடர்பான இலகுவான அனுமானங்களை வழங்குவதற்கு எளிமையான நிறக்குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆய்வினை அறிக்கைப்படுத்துவதற்காக இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டைமொபைல் டெப்லெட்கள் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதால் பல நன்மைகளஏற்படுகின்றன:

- இது மிகவும் துல்லியமான தரவினை உருவாக்குகின்றது.
- உடனடி முடிவுகளை வழங்குகின்றது.
- ஆய்வு நடைபெறும் புவியியல் இருப்பிடத்தினை/தரவு சேகரிக்கப்படுகின்றபுவிப்பரப்பை வரைபடத்தில் காட்டுகின்ற முறையை செயற்படுத்துகின்றது.
- இது ஒரு தடவை முதலீட்டு செலவினைக் கொண்டிருப்பதாலும், நேர விரயத்தினை குறைத்துள்ளதாலும் ஆய்வினை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளும்/செயற்படுத்தும் வகையில் இலகுவாக்கப்பட்டுள்ளது.

## 1.5.3 குடிமக்கள் அறிக்கை அட்டையின் வடிவமைப்பு

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக, மட்டக்களப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளுக்கென இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முறையானது வடிவமைக்கப்பட்டது. ஆய்விற்கென அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலின் நிலை மற்றும் பிரதேச சபைகளின் சேவை வழங்கல் போன்றவற்றினை உள்ளடக்கும் வகையில் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட செயலாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்களுடனான கலந்துரையாடலில் ஆய்வு நேரம் மற்றும் ஆய்விற்கு தேவையான வசதிகள் குறித்து முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிவில் சமூக அமைப்புகளின் (CSO) குழு ஒன்றினால் ஆய்வானது நடாத்தப்பட்டது. வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியாளர்கள் அதேபோல ACTED கள உத்தியோகத்தர்களின் நேரடி மேற்பார்வையுடன் மூன்று மாவட்டங்களிலும் இலத்திரனியல் குடிமக்கள்

அறிக்கை அட்டை ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு மாவட்ட ரீதியாக பயிற்சியளிக்கப்பட்டது.

### 1.5.4 இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் ஊடாக ஆய்வு செய்யப்பட வேண்டிய சேவைகளை அடையாளம் காணுதல்

சமூகம் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின்உறுப்பினர்களுடனான இலக்குக் குழு கலந்துரையாடல்களின் (Focus Group Disscussion-FGDs) போது, (i) பிரதேச சபைகளின் சேவை வழங்கல், (ii) இரண்டாம் நிலைக் கல்விச்சேவை (தரம் 5 – தரம் 13) வழங்கல் ஆகிய இரண்டு சேவைகளும் மேம்படுத்தப்பட வேண்டிய சேவைகளாக முன்னுரிமைப்படுத்தப்பட்டது. இந்த முன்னுரிமைகளானது,ACTED கிராம அபிவிருத்தி திட்டங்களில் (Village Development Plans-VDPs) சுட்டிக்காட்டப்பட்ட முன்னுரிமைகளுடன் ஒத்திருந்தது.

இவற்றில், சமூகம் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூலமாக வழங்கப்பட்ட தரப்படுத்தல்களின் மூலம் மேம்பாட்டிற்கான முன்னுரிமைப் பகுதிகள் அடையாளங்காணப்பட்டன.

கல்விச் சேவைகளைப் பொறுத்தவரை, சமூகத்துடன் மேற்கொள்ளப்பட்ட இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலைக் கல்வி முன்னுரிமையுடையதாக அடையாளம் காணப்பட்டது.

### 1.5.5 செயற்திறன் குறிகாட்டிகளின் உருவாக்கம்

மூன்று மாவட்டங்களிலும் உள்ள சமூக குழுக்கள், வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமாக இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகளுக்கான குறிப்பிட்ட குறிகாட்டிகளின் தொகுப்பொன்று அடையாளம் காணப்பட்டது. இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் செயற்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டன:

| இரண்டாம் நிலைக் கல்வி சேவை வழங்கலின் அம்சங்கள் | குறிகாட்டிகள் |
|---|---|
| அணுகல் | • கிராமசேவகர்பிரிவுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பாடசாலைக்குச் செல்லுதல்<br>• பாடசாலைக்கு சீராக வருகை தருதல்<br>• வருகை தராமைக்கான காரணங்கள்<br>• தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தருதல் |
| தரம் | • தரத்துடனான திருப்தி |
| வசதிகள் | • கிடைக்கும் தன்மை<br>• திருப்தி |
| ஆசிரியர்கள் | • கிடைக்கும் தன்மை<br>• ஆசிரியர்களின் தரம்<br>• ஆசிரியர்களின் நடத்தை<br>• கற்பித்தல் அணுகுமுறை |
| அசௌகரியங்கள் | • தண்டனைகள்<br>• துஷ்பிரயோகம்<br>• பாகுபாடு<br>• மறைமுக செலவுகள் |

## 1.6. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசம்

கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர, மெதகம, மற்றும் மடுல்ல போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பிரதேச சபைகள் மற்றும் கல்வி வலய அலுவலங்களுக்குட்பட்ட பல பிரதேசங்களை இந்த ஆய்வானது உள்ளடக்கியுள்ளது.

| பிரதேச செயலகபிரிவு/பிரதேச சபை/ வலயக்கல்வி அலுவலகம் | கிராமசேவகர் பிரிவு (GNs) | கிராமங்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மடுல்லபிரதேச செயலகப்பிரிவு/மடுல்ல பிரதேச சபை/பிபில கல்வி வலயம் | நாமல்ஓயா கொலணி | 5 | 318 |
| | தல்கொடயாய | 2 | 229 |
| | ரிடிகாவத்தை | 3 | 278 |
| | பங்குவ | 3 | 286 |
| | பங்குர | 4 | 213 |
| | கொல்லதெனிய | 12 | 412 |
| | மாகந்தாஓயா கொலணி | 4 | 248 |
| மேதகமபிரதேசசெயலகப்பிரிவு/மெதகமபிர தேச சபை/பிபில கல்வி வலயம் | ரத்னதெனிய | 6 | 372 |
| | மேல்லகம | 4 | 432 |
| | பிடதெனிய | 4 | 296 |
| | பென்தியாவ | 4 | 408 |
| | கொடபோவ | 6 | 383 |
| | பிபிலமுல்ல | 3 | 328 |
| | எல்ஹெர | 2 | 280 |
| படல்கும்புரபிரதேசசெயலகப் பிரிவு / படல்கும்புரபிரதேச சபை/மொனராகலை கல்வி வலயம் | மாலிகாத்தென | 3 | 394 |
| | எல்ல | 4 | 305 |
| | கொடமுதுன | 5 | 410 |
| | லுனுகல கொலணி | 5 | 532 |
| | தேவதுர | 4 | 699 |
| | மியனகந்துர | 2 | 484 |


# 2. முக்கிய கண்டறிவுகள்

இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல், கல்வித் தரம், வசதிகள் மற்றும் ஆய்வுப் பகுதியிலுள்ள இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பானதரவுகளை eCRC ஆய்வு சேகரித்தது. 2018 ஆம் ஆண்டு செப்டம்பர்- ஒக்டோபர் மாதங்களில் இந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தை பின்வரும் பிரிவுகள் முன்வைக்கின்றன. முதலாம் கட்ட eCRC ஆய்வில் சேகரிக்கப்பட்ட அடிப்படை தரவுகள் மற்றும் இரண்டாம் கட்ட eCRCஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் முறையே முதலாவது கட்ட ஆய்வு (ஆய்வு 1) மற்றும் இரண்டாவது கட்ட ஆய்வு (ஆய்வு 2) என குறிப்பிடப்படுகின்றன.

## 2.1 இரண்டாம் நிலைக் கல்விக்கான அணுகல்

கீழே தரப்பட்டுள்ள விளக்கப்படம் 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு,இரண்டாம் கட்ட ஆய்வின்போது ஒரு சொந்த GN பிரிவுக்குள் பாடசாலை செல்லும் மாணவர்களின் சதவீதம் மூன்று DS பிரிவுகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இருப்பினும் இரண்டாம் கட்ட eCRC ஆய்வுக்காக முதலாம் கட்ட eCRC ஆய்வில் பங்கேற்ற அதே குடும்பங்களிலிருந்து தரவு சேகரிக்கப்படவில்லை. சிலவேளைகளில் தரவு சேகரிப்பவர்கள், பதிலளித்தவர்கள் இல்லாதபோது வெவ்வேறு குடும்பங்களுக்கு சென்றனர். இதனால் இரண்டாம் கட்ட eCRC ஆய்வில், இன்னும் பல புதிய குடும்பங்களை உள்ளடக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. தொலைதூரத்தில் அமைந்திருப்பதன் காரணமாக, இப்பகுதிகளில் உள்ள குடும்பங்கள், தங்கள் பிள்ளைகளை சொந்த GN பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பும் வாய்ப்பை குறைவாகவே கொண்டுள்ளன. எனவே இரண்டாம் கட்ட ஆய்வின்போது அதிகமான மாணவர்கள் தங்கள் சொந்த GN பிரிவுகளுக்குள் அமைந்துள்ள பாடசாலைகளிலேயே கல்வி கற்கின்றனர் என தெரிகின்றது.


**விளக்கப்படம் 1: கிராம சேவகர் பிரிவுக்குள்ளே அமைந்துள்ள பாடசாலைக்குச் செல்லல்**




கிராம சேவகர் பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு வருகை தருவதற்கான காரணங்களை ஆராய்கின்றபோது விளக்கப்படம் 2 இல் குறிப்பிட்டுள்ளப்படி பல சிக்கல்கள் காணப்படுகின்றன. முதலாம் கட்ட ஆய்வின் போது, குறிப்பிட்ட தரம் வரையான வகுப்புகள் மட்டுமே GN பிரிவிற்குள் அமைந்துள்ள பாடசாலைகளில் நடாத்தப்படுகின்றமையேமுக்கிய காரணங்களில் ஒன்றாக சுட்டிக்காட்டப்பட்டது. இது இரண்டாம் நிலைக் கல்வி கற்கின்ற மாணவர்கள் தமது GN பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வழிவகுத்தது. எனினும், இரண்டாம் கட்ட ஆய்வின்போது இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் வீதாசாரம் குறைவடைந்துள்ளது. முதலாம் கட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்ட

மற்றுமொரு காரணமாக அமைவது சொந்த GN பிரிவில் பாடசாலைகள் இல்லாமல் இருப்பதாகும். எனவே GN பிரிவுகளுக்கு வெளியே உள்ள பாடசாலைகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்நிலை இரண்டாம் கட்ட ஆய்வின்போது மடுல்ல DS பிரிவில் குறிப்பிட்டளவு குறைவடைந்துள்ளது. வசதிகளின் பற்றாக்குறை மாணவர்கள் சொந்த GN பிரிவுகளுக்கு வெளியே பாடசாலைகளுக்கு செல்வதற்கான மற்றொரு முக்கிய காரணமாகும் (விளக்கப்படம் 2ஐப் பார்கவும்).

**விளக்கப்படம் 2: ஒரு கிராமசேவகர் பிரிவுக்கு வெளியிலுள்ள பாடசாலைக்கு வருகை தருவதற்கான காரணங்கள்**




## 2.2 இரண்டாம் நிலை கல்வி சேவைகளுடனான தரம் மற்றும் திருப்தி

பெற்றோர்கள் மற்றும் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட திருப்தி மட்டங்களையேவிளக்கப்படம் 3 சுட்டிக்காட்டுவதோடு முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட ஆய்வுகளின் போதான திருப்தியின் அளவை ஒப்பீடுகின்றது.மூன்றுDS பிரிவுகளிலும்,அதிகரித்த திருப்தியின் அளவானது கடந்த நான்கு மாதங்களில் கணிசமானளவு குறைவடைந்துள்ளது.படல்கும்புர மற்றும் மெதகமDSபிரிவுகளில், பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் அவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியின் தரம் குறித்துஓரளவுதிருப்தியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டினர்.2 ஆம் கட்ட ஆய்வின் போது,மடுல்லDS பிரிவில் கணிசமான பெரும்பான்மையானோர் அவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியில் குறைந்தளவிலான திருப்தியினையே அடைந்துள்ளதாக தெரிவித்தனர். வருட ஆரம்பத்தில் முதலாம் கட்ட ஆய்வுக்கு தரவு சேகரிக்கப்பட்டபோது நேர்மறையாக இருந்த தோற்றமானது இரண்டாம் கட்ட ஆய்வின் போது குறைவடைந்துள்ளமையை அடிப்படையாகக்கொண்டு திருப்தி குறைவடைந்துள்ளமையை விளக்க முடியும். ஏனெனில், மழைக்காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள், பதிலளித்தவர்களின் கல்வி அபிலாஷைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போக்குவரத்துப் பிரச்சினைகளோடு தொடர்புடைய தடைகள் மற்றும் குறிப்பிட்ட சில சவால்களை எதிர்கொண்டனர். பொதுவாக, குறைந்தளவான திருப்திக்கு வழங்கப்பட்ட காரணங்கள் பின்வருமாறு:

- குறிப்பிட்ட பாடங்களை கற்பிப்பதற்கு பொருத்தமான ஆசிரியர்களின் பற்றாக்குறை.
- ஆசிரியர்கள் நேரத்துக்கு வருகை தராமை

- வரையறுக்கப்பட்ட பேரூந்து சேவைகள் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை வீதிகளை அணுகுவதில் உள்ள மோசமான நிலைமைகள் காரணமாக ஏற்படுகின்ற போக்குவரத்துச் சிக்கல்களினால் ஆசிரியர்களின் வருகை பாதிக்கப்படுகின்றது.

- மேலதிக வகுப்புகள் அல்லது தேசிய ரீதியான நிகழ்வுகளில் மேலதிக கல்விசார் நடவடிக்கைகள் போன்றவற்றில்ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இன்மை.


- செய்முறை வகுப்புகள் திருப்திகரமான வகையில் நடாத்தப்படாமை

- ஆசிரியைகள் மகப்பேறு விடுமுறையில் செல்கின்ற போதுஅவர்களுக்கான எந்த மாற்றீடுகளும் வழங்கப்படாமை

- தரம் 9 வரை மட்டுமே வகுப்புகள் நடைபெறுகின்றமை

- பாடசாலைகளில் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளின் பற்றாக்குறை


**விளக்கப்படம் 3: கல்வி தரம் குறித்த ஒட்டுமொத்த திருப்தி**




தனியார் வகுப்புகளில் கலந்துக்கொள்ளும் மாணவர்களின் வீதமானது விளக்கப்படம் 4 இல் காட்டப்பட்டுகிறது.

இரண்டாம் கட்ட ஆய்வின்போது மெதகம மற்றும் மடுல்ல DS பிரிவுகளில், தனியார் வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்களின் வீதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் படல்கும்புர DSபிரிவில் கல்வி பயிலும் மாணவர்களின் வீதமானது ஒரு சிறிய வீழ்ச்சியையே காட்டி நிற்கின்றது. சவாலான பருவகால சூழ்நிலைகளால் பாதிக்கப்படக்கூடிய குடும்ப வருமானங்களைக் கொண்ட பெற்றோர்களால் தனியார் வகுப்புகளுக்கு பணம் கொடுக்க இயலாமையே தனியார் வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்களின் வீதம் வீழ்ச்சியடைந்ததற்கு காரணமாக இருந்தது. இவ் வீழ்ச்சிக்கான இன்னொரு காரணம், பரீட்சைகள் நெருங்கும்போது பாடசாலைகளினால் நாடாத்தப்படும் மேலதிக வகுப்புகளினால், மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்கு செல்வதற்கான அவசியம் குறைவடைகின்றது. தனியார் வகுப்புகளுக்கான வருகையில் பொதுவான வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் இரண்டாவது ஆய்வின் போது,மடுல்ல மற்று மெதகம DS பிரிவுகளில் கிட்டத்தட்ட 60% ஆன மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்கு சென்றுள்ளனர்.

**விளக்கப்படம் 4: தனிப்பட்ட வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்கள்**





பெரும்பாலான மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்கு செல்வது இம்மூன்று பிரிவுகளிலும் உள்ள பாடசாலைகளின் கல்வித் தரத்தில் சிக்கல் இருக்கக்கூடும் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். இப் பாடசாலைகளில் உள்ள சில பாடங்களுக்கு பொருத்தமான ஆசிரியர்களின் பற்றாக்குறை, பொதுவாக ஆசிரியர்கள் இல்லாமை போன்றன இதற்கு காரணங்களாக அமைகின்றன. மேலதிக அறிவினைப் பெறுதல், பாடசாலைகளில் கற்பிப்பதை புரிந்துக்கொள்வதிலுள்ள சிரமங்கள், ஆசிரியர்களின் போதிய கவனமின்மை மற்றும் தங்கள் நண்பர்கள் தனியார் வகுப்புகளுக்கு வருகை தருவதால் தாங்களும் தனியார் வகுப்புகளுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்படுதல் போன்றன தனியார் வகுப்புகளுக்கு வருகைத் தரும் மாணவர்களால் வழங்கப்பட்ட காரணங்களாகும்.


## 2.3 வசதிகள்

விளக்கப்படங்கள் 5, 6 மற்றும் 7 ஆகியன முறையே படல்கும்புர, மெதகம மற்றும் மடுல்ல **DS** பிரிவுகளில் உள்ள இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வசதிகள் தொடர்பான ஒரு கண்ணோட்டத்தை வழங்குகின்றன.

**விளக்கப்படம் 5: படல்கும்புர DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**



**விளக்கப்படம் 6: மெதகம DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




**விளக்கப்படம் 7: மடுல்ல DS பிரிவில் வசதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் பயன்பாடு**




ஆய்வுப் பகுதியில் உள்ள பெரும்பாலான மாணவர்களுக்கு பெரும்பாலான வசதிகள் கிடைக்கின்ற போதிலும், இம்மூன்று DS பிரிவுகளிலும் சிற்றுண்டிச்சாலைகள், மதிய உணவு, சமையலறை வசதிகள், போதுமான ஆசிரியர்கள் மற்றும் சுரக்ஷா காப்புறுதி போன்ற வசதிகள் கிடைப்பதில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணப்படுகின்றன. இருப்பினும்,கடந்த நான்கு மாதங்களில் சுரக்ஷா காப்புறுதியின் கிடைக்கும் தன்மை அதிகரித்துள்ளதோடு, இரண்டாம் கட்ட ஆய்வின் போது சுமார் 70% அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் தங்களுக்கு சுரக்ஷா காப்பீடு கிடைக்கின்றன என்பதை சுட்டிக்காட்டினர். இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சுரக்ஷா காப்பீட்டுத் திட்டம் கிடைக்கவேண்டும். இரண்டாம் கட்ட ஆய்வின் போது விழிப்புணர்வில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், சில பதிலளிப்பாளர்கள் இவ்வசதி பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அவர்களுக்கு காப்பீடு கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இவ்வசதியின் கிடைப்பனவு குறித்து அனைத்து மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தினை இது குறிக்கின்றது

இதனால், மாணவர்கள் இந்நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியடைவர் குறிப்பாக, வசதிகள் குறைந்த பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிக பயன் அடைவார்கள்.


படல்கும்புர DS பிரிவானது ஆசிரியர்கள் கிடைக்கும் தன்மையில்சிறிய வீழ்ச்சி ஒன்றினை காட்டிநிற்கின்ற அதேவேளை, மெதகம மற்றும் மடுல்ல DS பிரிவுகளில் இந்நிலை உகந்த அளவில் இல்லை என்றாலும் முன்னேற்றம் காணப்படுகின்றது. மதிய உணவினைப் பொறுத்தவரையில், ஆரம்ப பாடசாலை மாணவர்கள் அல்லது 100 மாணவர்களுக்கும் குறைவாக இருக்கின்ற பாடசாலைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இது இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்படாததால், ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களில் இந்த வசதி குறைவாக இருந்தமையை ஆய்வு பிரதிபலித்ததற்கு இதுவே காரணமாகும். இருப்பினும்,ஆரம்ப நிலை பாடசாலைகளில் உள்ள தமது இளைய சகோதரர்கள் மதிய உணவினைப் பெற்றுக்கொள்வதால் இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் மதிய உணவினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு எதிர்பார்ப்பு இருப்பதாக தெரிகின்றது.

பாடசாலை மாணவர்களுள் கிட்டத்தட்ட 100 சதவீதமானவர்கள் சீருடைகளுக்கான கூப்பன்களையும் பாடப் புத்தகங்களையும் பெற்றுக்கொள்கின்றனர். முன்பு சீருடைக்கான துணிகளைப் பெற்றுக்கொண்டதற்கு எதிராக கூப்பன்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. சில மாணவர்கள் சாப்பத்துகள் அல்லது வேறு ஆடை வகைகள் போன்ற பிற தேவைகளுக்காக கூப்பன்களை பயன்படுத்தியுள்ளனர். மிகவும் பின்தங்கிய மற்றும் தூரப் பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் கூப்பன்களைப் பயன்படுத்தி சீருடைகள்/பொருட்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வணிக நிலையங்களை அடைய ஒரு குறிப்பிட்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால் (போக்குவரத்துச் செலவு, பயண நேரம், காலவிரயம்- கூலித்தொழிலாளிகளுக்கு), இது அம்மாணவர்களுக்கு/பெற்றோர்களுக்கு கடினம் மற்றும் சீருடை கூப்பன்களில் காணப்படுகின்ற பிரதிகூலமாக இம்மேலதிக செலவுகள் அமைகின்றன.

## 2.4 மேலதிக கட்டணங்கள்


குறிப்பிடத்தக்க மாணவர்கள் தமது பாடசாலைகளுக்கு பல்வேறு கட்டணங்களை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் மேலதிக செலவுகள் ஏற்படுகின்றன என்பதையும் eCRC ஆய்வானது வெளிப்படுத்துகின்றது. **விளக்கப்படம் 8 இல்** காட்டப்பட்டுள்ளபடி, கேட்கப்பட்ட கட்டணங்கள் பெரும்பாலும் பணமாக இருந்தாலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே பணம் சாராதைவகள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டனர். இரண்டாம் கட்ட ஆய்வில்,மூன்று DS பிரிவுகளிலும் மேலதிக கட்டணங்களை செலுத்துமாறு கோரப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்டளவில் அதிகரித்துள்ளது.

**விளக்கப்படம் 8: பாடசாலைகளால் கோரப்பட்ட மேலதிக கட்டணங்கள்**



பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மாணவர்கள் கட்டணங்களை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுகளைப் பெற்றிருந்தாலும், **விளக்கப்படம் 9** இல்குறிப்பிடப்பட்டிருப்பது போல குறிப்பிட்டளவான மாணவர்கள் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இரண்டாம் கட்ட ஆய்வின் போது,தாங்கள் செலுத்திய பணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தாலும்,அவர்களுடைய சட்டப்பூர்வமான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இத்தகைய பரிமாற்றங்களுக்கு விசாரணைத் தேவைப்படலாம்.


**விளக்கப்படம் 9: பாடசாலைக்கு கொடுக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள்**




## 2.5 ஏனைய அசௌகரியங்கள்


ஆய்வு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களில் சிலர் அவர்களுடைய பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்களை எதிர்கொண்டதாக குறிப்பிட்டனர் (**விளக்கப்படம்** 10 ஐப் பார்க்கவும்).

**விளக்கப்படம் 10: பாடசாலைகளில் தண்டனை தொடர்பான சிக்கல்கள்**




இரண்டாம் கட்ட ஆய்வின் போது, தண்டனைகள் தொடர்பான சிக்கல்கள் பற்றி தெரிவித்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. விளக்கப்படம் 11 இல் காட்டப்பட்டுள்ளவாறு, மூன்று DS பிரிவுகளிலும் உடல் ரீதியான தண்டனைகளைப் (பிரம்பினால் அடித்தல்) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது.பாடசாலைகளில், உடல் ரீதியான தண்டணைகள் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தாலும், இம்மூன்று DS பிரிவுகளில் உள்ள மாணவர்களுக்கு அடிக்கடி வழங்கப்படும் தண்டனை முறையாக இது இருக்கின்றது.

**விளக்கப்படம் 11: மாணவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளின் வகைகள்**





விளக்கப்படம் 12 மற்றும் 13 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, மூன்று DS பிரிவுகளிலும் உள்ள பாடசாலைகளில் நிகழும் பாகுபாடு மற்றும் துஷ்பிரியோகங்கள் (உடல் ரீதியான, உணர்ச்சி ரீதியான, வாய்மொழி மூலமான) குறித்தும் சில மாணவர்கள் புகார் செய்தனர். இந்த எண்ணிக்கையானது குறைவாக இருந்தாலும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும், ஏனெனில் துஷ்பிரியோகங்கள் மற்றும் பாகுபாடு போன்றன பாடசாலைகளில் நிகழும் மனித உரிமை மீறல்கள் மீது தீவிர தாக்கங்களைக் கொண்டுள்ளன.

**விளக்கப்படம் 12: பாடசாலைகளில் இடம்பெறும் பாகுபாடுகள்**




**விளக்கப்படம் 13: பாடசாலைகளில் நிகழும் துஷ்பிரயோகங்கள்**




ஆசிரியர்களுடனான சிக்கல்கள், கல்வி தரத்தை பாதிக்கலாம். விளக்கப்படம் 14இல் விளக்கப்பட்டுள்ளபடி, மூன்று பிரிவுகளிலும் ஆசிரியர்கள் தொடர்பிலான பிரச்சனைகள் குறித்து மாணவர்கள் தெரிவித்தனர். இரண்டாம் கட்ட ஆய்வில்,மடுல்ல DS பிரிவில் ஆசிரியர்கள் தொடர்பான சிக்கல்கள் கணிசமானளவு குறைவாக காணப்படுகின்ற அதேவேளை படல்கும்புர மற்றும் மெதகம பிரிவுகளில் இந்நிலை அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது. மூன்று DS பிரிவுகளிலும் ஆசிரியர்களுக்கான வசதிகள் இல்லாமையே இப்பிரிவுகளில் உள்ளமிகப்பெரிய முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. இதனால் ஆசிரியர்களை தக்கவைத்துக்கொள்வது கடினமாக உள்ளது. இச்சிக்கலை எதிர்கொள்ள,ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்க வேண்டியது அவசியம் என பதிலளிப்பாளர்கள் கருதுகின்றனர். பாடசாலையிலிருந்து தூரத்தில் வசிக்கும் ஆசிரியர்களை விட பாடசாலைக்கு அருகே வசிக்கும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம் என்பதையும்பரிந்துரைத்தனர்.

**விளக்கப்படம் 14: ஆசிரியர்கள் தொடர்பான சிக்கல்கள்**



# 3. இரண்டாம் நிலைக் கல்வி வழங்கலுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள்

விளக்கப்படம் 15 இல் மூன்று DS பிரிவுகளில் இரண்டாம் நிலை கல்வி சேவைகள் வழங்கள் தொடர்பிலான செயல்திறனுக்கு வழங்கப்பட்ட மதிப்பீடை சுட்டிக்காட்டுகிறது. இரண்டாம் நிலை கல்வி சேவைகளின் திருப்தியான பயனர்களின் சதவீத அடிப்படையில் இம்மதிப்பீடு வழங்கப்படுகிறது.

விளக்கப்படம் 15 இல் நிறக்குறியீடுகள் பின்வருவனவற்றை குறிக்கின்றன

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| (சிவப்பு) | 40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| (மஞ்சள்) | 40%-60% இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் | செயற்திறனைப் பராமரிக்க வேண்டும்அல்லது தொடர்ச்சியான முன்னேற்றங்கள் தேவை |

**திருப்தியான பயனர்களுள் உயர்ந்த மற்றும் நடுத்தர திருப்தியடைந்த சேவை பயனர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்*

விளக்கப்படம் 15 இல் காட்டுள்ளவாறு பெரும்பாலான பகுதிகளில் இரண்டாம் நிலை கல்விச் சேவை வழங்கல் இரண்டாம் கட்ட ஆய்வின் போது பச்சை நிறத்தில் குறிக்கப்பட்டது. இந்த பகுதிகளில் திருப்தி அளவுகள் அதிகரித்துள்ளன (மேல்நோக்கி குறிக்கப்பட்ட அம்புகள் சுட்டிக்காட்டுகின்றன). இருப்பினும் மேலும் மேம்பாடு செய்வதற்கான தேவை உள்ளது.

## விளக்கப்படம் 15: இரண்டாம் நிலை கல்விச்சேவைகளுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடு

| | குடிநீர் | கழிவறை | விளையாட்டு மைதானம் | எல்லைச்சுவர் | நூலகம் | விஞ்ஞான ஆய்வுக்கூடம் | கணினிக்கூடம் | சிற்றுண்டிச்சாலை | மதிய உணவு | சமையலறை | பாடப்புத்தகங்கள் | சீருடை கூப்பன்கள் | ஆசிரியர்கள் | சுரக்ஷா காப்புறுதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆய்வு 2** | | | | | | | | | | | | | | |
| படல்கும்புர | 83% ↓ | 83% ↓ | 74% ↓ | 57% ↓ | 88% ↓ | 80% ↓ | 74% ↓ | 57% ↓ | 44% ↓ | 60% ↓ | 95% ↑ | 95% ↑ | 94% ↓ | 89% = |
| மெதகம | 76% ↓ | 74% ↓ | 71% ↑ | 68% ↓ | 84% ↓ | 89% = | 81% ↓ | 0% ↓ | 10% ↓ | 44% ↓ | 91% ↓ | 96% ↓ | 87% ↓ | 99% ↑ |
| மடுல்ல | 89% ↓ | 88% ↓ | 68% ↓ | 76% ↓ | 80% ↑ | 83% ↓ | 77% ↓ | 64% ↑ | 0% ↓ | 87% ↓ | 91% ↑ | 92% ↓ | 95% ↑ | 65% ↓ |
| **ஆய்வு 1** | | | | | | | | | | | | | | |
| படல்கும்புர | 79% | 90% | 94% | 89% | 91% | 93% | 80% | 45% | 98% | 95% | 92% | 93% | 99% | 89% |
| மெதகம | 85% | 86% | 70% | 87% | 93% | 89% | 84% | 44% | 99% | 72% | 96% | 99% | 94% | 89% |
| மடுல்ல | 93% | 91% | 88% | 87% | 97% | 93% | 87% | 62% | 29% | 86% | 90% | 96% | 93% | 98% |

40%இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள்

40%-60%இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள்

60%இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள்

# 4. பரிந்துரைகள்


## 4.1. சேவை அடிப்படையில் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்

### 4.1.1 உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பகுதிகள்


பதிலளிப்பாளர்களால் அடையாளம் காணப்பட்ட உடனடி சேவை மேம்பாட்டினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு முடிவுகள் காட்டி நிற்கின்றன.

இவை, விளக்கப் படங்கள் 16, 17 மற்றும் 18 ஆகியவற்றில் ஒவ்வொரு பிரதேச பிரிவுகள் அடிப்படையில் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.


**விளக்கப்படம் 16: படல்கும்புரபிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள்**



**விளக்கப்படம் 17: மெதகம பிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள்**




**விளக்கப்படம் 18: மடுல்லபிரிவில் உடனடி சேவை மேம்பாட்டை வேண்டி நிற்கின்றபகுதிகள்**



### 4.1.2. முன்னேற்றங்களுக்கான பரிந்துரைகள்

பொதுவாக இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகள் தொடர்பாக பதிலளித்தவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில்,அதிருப்திக்கான காரணங்களாக அணுகல் தொடர்பான பிரச்சனைகள், தேவையான வசதிகளின் பற்றாக்குறை, வசதிகளை பராமரிப்பதில் உள்ள பற்றாக்குறை, மற்றும் பொருத்தமான அதிகாரிகளின் முறையான கண்காணிப்பு மற்றும் மேம்பார்வை இன்மை போன்றவற்றை அவர்கள் அடையாளப்படுத்தினர்.இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலை முன்னேற்றுவதற்காக பதிலளித்தவர்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகளாவன,சேவை வழங்கல் தொடர்பான அரச அதிகாரிகளின் சிறந்த கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்கான அவசியம் மற்றும் பாடசாலைகளில் நிகழும் பாகுபாடுகளை தடுக்கக்கூடிய நடவடிக்கைகள் போன்றவற்றை வலியுறுத்தின.இதற்கு மேலதிகமாக, இரண்டாம் நிலைக் கல்விச்சேவையின் முன்னேற்றத்தை கண்காணிக்க குறைந்தப்பட்சம் ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பதிலளித்தவர்கள் கருத்து தெரிவித்தனர்.

### 4.1.3. ஏனைய பரிசீலனைகள்

அதிக கவனம் தேவைப்படும் பகுதிகளின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கு இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட கண்டறிவுகள் (குறிப்பாக விளக்கப்படம் 15 இல் தரப்பட்ட மதிப்பீடுகள்) மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட சேவை வழங்கல் இடைவெளிகளைஎவ்வாறு அடையாளப்படுத்த முடியும் என்பதை புரிந்துகொள்ள இவ்விடயம் மேலும் நெருக்கமாக ஆராயப்பட வேண்டும். மூன்று DS பிரிவுகளிலும் உள்ள இரண்டாம் நிலைக் கல்விச்சேவை வழங்கலை முன்னேற்றுவதற்கான எதிர்கால தலையீடுகளை திட்டமிடுவதற்கு,அடையாளப்படுத்தப்பட்ட உடனடி சேவை முன்னேற்றம் தேவைப்படும்பகுதிகளைகவனத்தில்கொள்ள வேண்டும்.ய

## 4.2. முன்னோக்கிய நகர்வு

2018 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வின் ஆரம்ப கண்டறிவுகளை அடிப்படையாகக்கொண்டு செயற்பாட்டுத் திட்டங்கள் (இணைப்பு 1 ஐப் பார்க்கவும்) தயாரிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் அரச சிரேஷ்ட அதிகாரிகள், வலயக் கல்வி பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள், பிரதேச சபை செயலாளர்கள்,மற்றும் சமூக பிரதிநிதிகளுக்கு இக்கண்டறிவுகள் வழங்கப்பட்டன. 2018 ஒக்டோபர் மாதத்தில் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் இரண்டாவது ஆய்வினை மேற்கொள்வதற்கு முன்னர்,இரண்டாம் நிலைக் கல்விச்சேவைகளை முன்னேற்றுவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளை அடையாளம் காணும் செயற்பாட்டு திட்டங்களை திட்டமிடுவதற்கு, சேவை வழங்குநர்கள் மற்றும் சேவை பெறுநர்களுக்கிடையில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாட்டு திட்டங்கள் குறிப்பாக சேவை வழங்குநர்களின் முன்னேற்றத்தையும் பொறுப்புணர்வையும் கண்காணிக்கும் வகையில் CSO களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.சேவை வழங்குநர்களின் முன்னேற்றம், பொறுப்புடைமை மற்றும் அக்கறை போன்றவற்றை கண்காணிப்பதற்கு இச்செயற்பாட்டுத் திட்டங்கள் சிவில் சமூக அமைப்புகளுக்கு மிகவும் உதவியாக அமைகின்றன.

முதலாவது eCRC ஆய்வின் போது,இரண்டாம் நிலை கல்விச் சேவை வழங்கல் தொடர்பாக தரப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக அதனை தொடர்ந்து முன்னேற்றத்தினை ஆராய்வதற்கு இரண்டாவது eCRC ஆய்வானது 2018 ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டது. பின்வரும்அட்டவணையில் தரப்பட்டுள்ள நிறக்குறியீடானது,திருப்தி மட்டங்களை சுட்டிக்காட்டுவதற்கும், சேவை முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளை சுட்டிக்காட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. அடிப்படை ஆய்வு (முதலாவது ஆய்வு) மற்றும் அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் (இரண்டாவது ஆய்வு) போது, திருப்தி மட்டங்களுக்கிடையிலான ஒப்பீடொன்றினை விளக்கப்படம் 15 வழங்குகின்றது.நிறத்தில் ஏற்படுகின்ற எந்தவொரு மாற்றமும்

திருப்தி மட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றத்தினை பிரதிபலிக்கின்றன, இதன்மூலம் கடந்த நான்கு மாதங்களில் ஏற்பட்ட முன்னேற்றம்/பின்னடைவின் அளவு சுட்டிக்காட்டப்படுகின்றது.

| நிறம் | உயர் திருப்தியுடைய பயனர்களின் % | தேவைப்படும் நடவடிக்கை |
|---|---|---|
| (சிவப்பு) | 40% இற்கும் குறைவான திருப்தியுடைய பயனர்கள் | உடனடி கவனம் தேவை |
| (மஞ்சள்) | 40%-60% இற்கு இடைப்பட்ட திருப்பியுடைய பயனர்கள் | முன்னேற்றம் தேவை |
| (பச்சை) | 60% இற்கும் அதிகமான திருப்தியுடைய பயனர்கள் | செயற்திறனைப் பராமரிக்க வேண்டும்அல்லது தொடர்ச்சியானமுன்னேற்றங்கள் தேவை |

**திருப்தியான பயனர்களுள் உயர்ந்த மற்றும் நடுத்தர திருப்தியடைந்த சேவை பயனர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்*

ஒரு நிறமாற்றம் தெளிவாக தெரியவில்லை என்றாலும்,திருப்தி வீதத்தில் ஏற்படுகின்ற ஒரு அதிகரிப்பானது சேவை வழங்கல் அடிப்படையில் ஏற்படுகின்ற ஒரு முன்னேற்றமாக கருதமுடியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேம்பட்ட திருப்தி மட்டங்களைப் பொறுத்தவரையில்,முதலாம் கட்ட eCRC ஆய்வின் கண்டறிவுகளானது,முன்னேற்றங்கள் தேவைப்படும் சேவைகள் குறித்து சேவை வழங்குநர்களுடன் ஒரு பயனுள்ள உரையாடலை மேற்கொள்ள, சேவை பெறுநர்களுக்கு விழிப்புணர்வுமற்றும் ஊக்குவிப்பினை வழங்கியமையை பொதுவாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதுசேவைப் பெறுநர்களின் மத்தியில்அதிகளவான திருப்தியைஉருவாக்கும் வகையில், குறிப்பிட்ட சில பகுதிகளில் சேவைகளை முன்னேற்றுவதற்கு பாரிய நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு சேவை வழங்குநர்களை தூண்டுகின்றது.

எனவே,முன்னேற்ற கண்காணிப்பு அட்டவணையான விளக்கப்படம் 15 பல நன்மைகளை வழங்குகின்றது.பொதுச்சேவைகள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து அதிகளவான பொறுப்புணர்வு/நடவடிக்கையினை வலியுறுத்துதல் தொடர்பாக சேவை பெறுநர்கள் தமது திருப்தி மட்டங்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை இது வழங்குகின்றது. பொதுமக்களுக்குரிய தேர்தல் தொகுதியில் முதலாம் கட்ட ஆய்விலிருந்து இரண்டாம் கட்ட ஆய்வு வரை எவ்வாறான சேவை முன்னேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை அவர்களுக்கு விளக்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிகளுக்கான ஒரு பயன்மிக்க கருவியாகவும் காணப்படுகின்றது.

சேவை வழங்களோடு தொடர்புடைய மிகவும் சிக்கலான விடயங்களை சுட்டிக்காட்டுகின்ற சமூக கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சமிக்ஞைகளாக காணப்படுகின்ற eCRC கண்டறிவுகளை நினைவில் கொண்டு, பிரச்சினைக்குரிய பகுதிகளில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இந்த eCRC ஆல் வழங்கப்பட்ட தகவல்களை பயன்படுத்த முடியும். இந்த சிக்கல்களோடு இணைந்துள்ள காரணங்களை புரிந்துகொள்வதற்கு ஆழமான ஆய்வுகள் தேவைப்படலாம்.

இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பின்வருவன பரிந்துரைக்கப்படுகின்றன:

- இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக சேவை வழங்கல் செயற்பாடுகள் பலவீனமான காணப்படுகின்ற பிரதேசங்களை அடையாளம் காணுதல்,

- சேவைகளை முன்னேற்ற பூர்த்திசெய்யப்படவேண்டிய இடைவெளிகளை கண்டறிந்து திறமையான கல்விச்சேவை வழங்கலினை தடுக்கின்ற காரணங்கள் மற்றும் காரணிகள்தொடர்பாக விசாரணை செய்தல்,
- கல்விச் சேவை வழங்கலின் இடைவெளியினை குறைப்பதற்கு தலையீடுகளின் சேர்க்கையானது அடையாளம் காணப்பட வேண்டும்.
- சேவை வழங்கல் இடைவெளிகள் அடையாளம் காணப்பட்டவுடன், தரநிலை மதிப்பீட்டு மட்டங்களில் இருந்து சேவை வழங்கல் செயற்பாடுகள் மேம்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்குத் தேவைப்படும் சேவை பயனர்களின் திருப்தி மட்டங்களை தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

**இணைப்பு 1: செயற்பாட்டுத் திட்டங்கள் (முதலாவது கட்ட eCRC ஆய்விலிருந்து பெறப்பட்டது)**

**கல்விச் சேவைக்கான குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு –செயற்பாட்டுத் திட்டம் - பிபில வலயம்**

**பிரதேச கல்வி அலுவலகம், மெதகம**

***ஆய்வு செய்யப்பட்ட கிராம சேவகர்பிரிவுகளின் பெயர்கள்***

***ரத்தனதெனிய, பென்தியாவ, கொடபோவ, மேல்லகம, பிபிலமுல்ல, எல்ஹென,பிடதெனிய***

| இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவை | குறுங்காலம்/ நீண்டகாலம் | பணிக்கு பொறுப்பானவர் யார் | மேம்பாட்டிற்கான பொறுப்பு | ஆரம்பிக்கும் திகதி | முடிவடையும் திகதி | முன்னேற்றம் கண்காணிப்பு | மாதாந்த சந்திப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | குடிநீர் | நீண்டகாலம் | சிவில் சமூகங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் | அரசாங்க அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் | ஆகஸ்ட் 2018 | ஒக்டோபர் 2018 | கிராமசேவகர், அதிபர், பொது சுகாதார பரிசோதக (PHI), வலய கல்வி அலுவலகம் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம். |
| 02 | கழிவறை வசதிகள்- கழிவறைகளை பராமரித்தல் | குறுங்காலம் | கிராம மட்ட சிவில் சமூக சங்கம் | பெற்றோர்கள், அதிபர், சமூர்த்தி சங்கம் | 2018 மே மாதத்தின் இறுதி வாரம்<br>2018 ஜுன் | ஆகஸ்ட் 2018<br>டிசம்பர் 2018 | அதிபர், வலயக் கல்வி அலுவலகம் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம். |
| 03 | (வேலி)-எல்லைச் சுவர் | நீண்ட காலம் | வலயக் கல்வி அலுவலகம் | அதிபர் பாடசாலை அபிவிருத்தி சங்கம் சமூகம் | 2018 ஜுன் | 2020 ஆம் ஆண்டு | வலயக் கல்வி அலுவலகம், அதிபர் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம. |
| 04 | ஆசிரியர்களோடு தொடர்புடைய பிரச்சினைகள் (ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் முறையில் பற்றாக்குறை) | குறுங்காலம் | அதிபர் | அதிபர், பிரதேச கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம் | 2018 ஜுன் | சேப்டம்பர் 2018 | வலயக் கல்வி அலுவலகம் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம |
| 05 | விளையாட்டு மைதானம் | நீண்ட காலம் | அதிபர் மற்றும் பாடசாலை,கற்பித்தல் ஊழியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம் | பிரதேச சபை<br>வலயக் கல்வி அலுவலகம் (விளையாட்டுப் பொருட்களுக்கான ) | 2018 ஜுன் | 2018 ஆம் ஆண்டுக்குள் | வலயக் கல்வி அலுவலகம் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம் |

| இல | முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவை | குறுங்காலம்/ நீண்டகாலம் | பணிக்கு பொறுப்பானவர் யார் | மேம்பாட்டிற்கான பொறுப்பு | ஆரம்பிக்கும் திகதி | முடிவடையும் திகதி | முன்னேற்றம் கண்காணிப்பு | மாதாந்த சந்திப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06 | சிற்றுண்டிச் சாலை | குறுங்காலம் | அதிபர், பாடசாலை ஊட்டச்சத்துக்கான குழு | (நல்லதரத்துடனான சிறறுண்டிச்சாலை பராமரிப்பு)<br>அதிபர்,<br>பாடசாலை அபிவிருத்தி சங்கம்<br>சமூகம் | 2018 மே | ஜுன் 2018 | வலயக் கல்வி அலுவலகம், அதிபர்,பொது சுகாதார உத்தியோகத்தர் (PHI) | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம். |
| 07 | சுரக்ஷா காப்பீடு | குறுங்காலம் | அதிபர் | ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் | 2018 மே | 2018 ஜுன் மாத முடிவில் | பிரதேச கல்வி அலுவலகம் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம். |
| 08 | பாடசாலை கட்டிடம் | நீண்டகாலம் | அதிபர்,<br>ஆசிரியர்கள்,<br>பாடசாலை அபிவிருத்தி சங்கம் | அதிபர் மற்றும் பெற்றோர்கள் | 2018 மே | 2018 டிசம்பர் | வலயக் கல்வி அலுவலகம் | வெள்ளிக்கிழமை- ஒவ்வொரு மாதத்தின் 3வது வாரம். |

**பங்களிப்பு:**

T.M. தர்மதாச- பிரதேச கல்விப் பணிப்பாளர் (DDE), பிரதேச கல்வி அலுவலகம், மெதகம

பத்மினி நிரஞ்சலா- ரத்தன்தெனிய
சந்திமா ஜீவன்தி- பன்டியாவ
கயனி மதுவந்தி- பிடதெனிய
வசந்தி சஞ்சீவனி - ரத்தன்தெனிய
ஜமோதி உபேஷிகா - பிடதெனிய

***திகதி- 10.05.2018, இடம் – உள்ளூர் அரசாங்கத்தின் உதவி ஆணையாளர் அலுவலகம்(ACLG office) - மொனராகலை***

## கல்விச் சேவைக்கான குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு – செயற்பாட்டுத் திட்டம் - பிபில வலயம்

## மடுல்ல கல்விப் பிரிவு

***CRCஇல் உள்ளடக்கப்பட்ட GN பிரிவுகளின் பெயர்கள்***
*நாமலோயா ஜனபதய, பங்குர, கொல்லாதெனிய, ரிதகாவத்தை, பங்குவ, தல்கொடயாய, மகந்தலுயா கோலணி*

| இல | முன்னுரிமைப்படுத்தப் பட்ட சேவை | குறுங்காலம்/ நீண்டகாலம் | பணிக்கு பொறுப்பானவர் யார் | முன்னேற்றங்களுக்கான ஏனைய பங்குதாரர்கள் | ஆரம்பிக்கும் திகதி | முடிவடையும் திகதி | முன்னேற்றம் கண்காணிப்பு | மாதாந்த சந்திப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஆசிரியர் வசதிகள் | குறுங்காலம் மற்றும் நீண்டகாலம் | வலயக் கல்வி அலுவலகம் | பிரதேச கல்விப் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள் | 2018-5-10 | 2018-8-10 | சிவில் சமூக அமைப்புகள் | வெள்ளிக்கிழமையில் மாதத்திற்கு ஒருமுறை |
| 02 | குடிநீர்<br>• நீ வழங்கல்<br>• நீரை சுத்தப்படுத்தும் வசதி | குறுங்காலம் மற்றும்நீண்டகாலம் | மாகாண கல்வித் திணைக்களம், பிரதேச சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் | பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 2018-5-10 | 2020 | சிவில் சமூக அமைப்புகள் | மாதத்திற்கு ஒரு முறை |
| 03 | கழிவறை வசதிகள் | நீண்டகாலம் | பிரதேச சபைசெயலாளர் அலுவலகம், மாகாண கல்வி அலுவலகம் | அதிபர் | 2018-5-10 | 2020 ஆம் ஆண்டு | அதிபர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |
| 04 | நூலகம் | நீண்டகாலம் | ஆதிபர், நூலகர் | அதிபர் | 2018-5-10 | 2018-7-10 | வலயக் கல்வி பணிப்பாளர், நூலகர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |
| 05 | விளையாட்டு மைதானம் மற்றும் வசதிகள் | நீண்டகாலம் | பெற்றோர்கள், அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம் | பிரதேச கல்வி அலுவலகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் | 2018-5-10 | 2018-8-10 | பிரதேசக் கல்வி அலுவலகம், அதிபர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |

| இல | முன்னுரிமைப்படுத்தப் பட்ட சேவை | குறுங்காலம்/ நீண்டகாலம் | பணிக்கு பொறுப்பானவர் யார் | முன்னேற்றங்களுக்கான ஏனைய பங்குதாரர்கள் | ஆரம்பிக்கும் திகதி | முடிவடையும் திகதி | முன்னேற்றம் கண்காணிப்பு | மாதாந்த சந்திப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06 | விஞ்ஞான ஆய்வுக்கூட வசதிகள்<br>*ஆசிரியர்களின் பற்றாக்குறை<br>*தேவையான உபகரணங்களின் பற்றாக்குறை | நீண்டகாலம் | மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் | மாகாண கல்வி பணிப்பாளர், வலயக் கல்வி பணிப்பாளர் | 2018-5-10 | 2020 ஆம் ஆண்டு<br>2018-8-10 | அதிபர், வலயக் கல்வி பணிப்பாளர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |
| 07 | சிற்றுண்டிச் சாலை (தரமான உணவுகள் மற்றும் வசதிகளின தரம்) | குறுங்காலம் | அதிபர், பாடசாலை ஊட்டச்சத்து குழு, பொது சுகாதார ஆய்வாளர் (PHI) | அதிபர் பாடசாலை ஊட்டச்சத்து குழு,பொது சுகாதார ஆய்வாளர் (PHI) | 2018-5-10 | 8-8-10 | அதிபர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |
| 08 | பாடசாலை சீருடை | நீண்டகாலம் | வலயக் கல்வி அலுவலகம் | வலயக் கல்வி அலுவலகம் | 2018-5-10 | 2018-8-10 | அதிபர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |
| 09 | புத்தகங்கள் | நீண்டகாலம் | கல்வி வெளியீட்டு திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் | கல்வி வெளியீட்டு திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் | 2018-5-10 | 2020 ஆம் ஆண்டு | அதிபர், பிரதே கல்வி பணிப்பாளர் | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை |

**பங்களிப்பு:**

I.P.K. சமாலி, மேலதிக கல்விப் பணிப்பாளர், பிபில
KD.P. நாலிக கருணாதிலக, வலயக் கல்வி அலுவலகம், மடுல்ல
H.M. சந்ரிகா ஹேரத்- நாமலோய ஜனபதயே கிராமிய அமைப்பு
N. ஜம்பிக தமயந்தி , நாமலோய ஜனபதயே கிராமிய அமைப்பு
K.M. சந்ரபால, ரித்திகாவத்தை
K..M.புஷ்பகுமார-ரித்திகாவத்தை
G.G. பியால் பண்டுல, கொலதெனிய
R.M.சமன்சிறி,மாகந்தா ஓயா ஜனபதய
K.M. ஜயதிலக

***திகதி- 10.05.2018, இடம் – உள்ளூர் அரசாங்கத்தின் உதவி ஆணையாளர் அலுவலகம்(ACLG office) - மொனராகலை***

**கல்விச் சேவைக்கான குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வு – செயல் திட்டம் - மொனராகலை வலயம்**

***ஆய்வில் உள்ளடக்கப்பட்ட GN பிரிவுகளின் பெயர்கள்***
***கொடமுதுன, தேவதுர, மியெனகந்துர, எல்ல, மாலிகாதென்ன, லுனுகல கொலனி***

| இல | முன்னுரிமை சேவை | குறுங்காலம்/ நீண்டகாலம் | பணிக்கு பொறுப்பானவர் யார் | முன்னேற்றங்களுக்கான ஏனைய பங்குதாரர்கள் | ஆரம்பிக்கும் திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது | மாதாந்த சந்திப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | கற்பிக்கும் முறை | குறுங்காலம் | வலயக் கல்விப் பணிப்பாளர்- மொனராகலை | ஆசிரியர்கள், ஆரம்ப கல்வி ஆசிரியர்களின் போதனாசிரியர் | 2018-5-10 | 2018-5-30 | சிவில் சமூக அமைப்பின்உறுப்பினர்கள், பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகம் | 20-06-2018 |
| 02 | குடிநீர் பிரச்சினை | நீண்டகாலம் | அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகம் | அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகம் | 2018-5-10 | 2018-12-31 | சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், வலயக் கல்வி அலுவலகம், பிரதேச கல்வி அலுவலகம் | 30-09-2018 |
| 03 | விளையாட்டு மைதான வசதிகளை அபிவிருத்தி செய்தல் | நீண்டகாலம் | அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகம் | ஆதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலகம், அரசியல் பிரதிநிதிகள் | 2018-5-10 | 2018-12-31 | சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், வலயக் கல்வி அலுவலகம், பிரதேச கல்வி அலுவலகம் | 30-09-2018 |
| 04 | முறைக்கப்பட்ட செலவுகளை குறைத்தல் மற்றும் கட்டணங்களுக்கான பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் | குறுங்காலம் | வலயக் கல்வி பணிப்பாளர்- மொனராகலை | அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம்- வலயக் கல்வி அலுவலகம், பொருளாளர் | 2018-5-20 | 2018-12-31 | சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், வலயக் கல்வி அலுவலகம், பிரதேச கல்வி அலுவலகம் | 30-09-2018 |
| 05 | பாடசாலைகளில் தண்டனைகள் குறித்து விசாரித்தல் | குறுங்காலம் | ஆதிபர், ீசைெஉியட, ஆசிரிய ஊழியர்கள், வகுப்பாசிரியர்கள் | அதிபர், பெற்றோர்கள், வலயக் கல்வி பணிப்பாளர் | 20-05-2018 | 30-6-2018 | அதிபர்,சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், வலயக் கல்வி அலுவலகம், பிரதேச கல்வி அலுவலகம் | 30-09-2018 |
| 06 | சுரக்ஷா காப்பீடு- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | குறுங்காலம் | ஆதிபர், வலயக் கல்வி அலுவலகம் | அதிபர், வலயக் கல்வி அலுவலகம் | 01-06-2018 | 30-06-2018 | சிவில் சமூக அமைப்பின் உறுப்பினர்கள், அதிபர், வலயக் கல்வி அலுவலகம், பிரதேச கல்வி அலுவலகம் | 15-06-2018 |

| இல | முன்னுரிமை சேவை | குறுங்காலம்/ நீண்டகாலம் | பணிக்கு பொறுப்பானவர் யார் | முன்னேற்றங்களுக்கான ஏனைய பங்குதாரர்கள் | ஆரம்பிக்கும் திகதி | முடிவடையும் திகதி | செயற்பாட்டினை யார் கண்காணிப்பது | மாதாந்த சந்திப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | சீருடை கூப்பன் முறை | நீண்டகாலம் | கல்வி அமைச்சு, இசுறுபாய | கல்வி அமைச்சு, கல்வி செயலாளர், வலயக் கல்வி பணிப்பாளர் | 01-06-2018 | 31-12-2018 | கல்வி அமைச்சு, கல்வி செயலாளர், வலயக் கல்வி பணிப்பாளர் | 30-09-2018 |

**பங்களிப்பு:**

D.C. ஜசின்த, உதவி கல்வி பணிப்பாளர்(A.D.E), வலயக் கல்வி அலுவலகம்
M.A. தம்மிக- கொடமுதுன,
R.W. அசோக விஜயசிங்க- எல்ல
A.M.சுபுன் பிரியங்கரமலிகதன்ன
J.M. சோமலதா- லுனுகல கோலணி,
R.M.பிரேமதிலக– லுணுகல கோலணி

***திகதி-10.05.2018 - உள்ளூர் அரசாங்கத்தின் உதவி ஆணையாளர் அலுவலகம்(ACLG office) - மொனராகலை***

“சமூக அபிவிருத்தி மற்றும் நல்லாட்சி இணை உருவாக்கம்: சிறந்த சமூக அபிவிருத்தியை எட்டும் பொருட்டு பொதுமக்கள் சார் சமூக அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்குமிடையேயுள்ள ஒருங்கிணைப்பின் வளர்ச்சிக்கு துணைசெய்தல்” எனும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி திட்டத்தின் கீழ் வறுமை ஆராய்ச்சி நிலையமானது மட்டகளப்பு, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளை (eCRC) மேற்கொண்டது. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டை ஆய்வுகளானது (eCRC), தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப்பகுதியில் காணப்படுகின்ற

(i) பிரதேச சபையின் சேவைகள் வழங்கல்
(ii) இரண்டாம் நிலை கல்விச்சேவை வழங்கல்

ஆகிய இரண்டு துறைகளின் சேவைத்தரம், சேவை வழங்குனர்களின் பொறுப்பு மற்றும் சேவை முன்னேற்றங்களை வேண்டி நிற்கினற பகுதிகள் போன்றவற்றினை தீர்மானிப்பதை இலக்காக கொண்டிருந்தது. தற்போது பொதுசேவைகளைப் பெற்றுக்கொள்பவர்களின் அணுகல், தரம் மற்றும் திருப்தி போன்றவற்றினை மதிப்பிடுவதற்கான கருவியாக அதேபோல சமூகப் பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான கருவியாகவும் இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையினை (eCRC) பயன்படுத்த முயற்சிக்கும் நோக்குடன் முதலாவது இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) கண்டறிவுகளை இந்த அறிக்கையானது வழங்குகின்றது. மூன்று மாவட்டங்களில் இருந்து பதிலளித்தவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட சேவை வழங்கலில் உடனடி கவனம் மற்றும் முன்னேற்றத்தினை வேண்டி நிற்கின்ற பல பகுதிகளை இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) முடிவுகளானது வெளிக்காட்டி நிற்கின்றன. இலத்திரனியல் குடிமக்கள் அறிக்கை அட்டையின் (eCRC) ஆரம்ப முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதோடு சேவை வழங்குனர்கள் மற்றும் சேவை பெறுபவர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்த ஆய்வின் கண்டறிவுகளை பரவலாக்குவதற்கும், செயற்பாட்டுக் கொள்கை மற்றும் நடைமுறைச் சீர்த்திருத்தங்கள் தொடர்பாக ஆலோசிப்பதற்கு இத்தகவல்களை பயன்படுத்துவதற்கும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.



29 ஆர்.ஜி சேனநாயக்க மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி: +94(011) 2676 955, 4690200
தொலைநகல்: +94(011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

ISBN: 978-955-3628-42-8